# Judicial Form No.53

(See Rule 43)

## DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 657/2024

2026-ம் ஆண்டு **ஆகஸ்ட்** மாதம் 12-**ம்** தேதி **புதன்கிழமை** குற்றம் முறையிடுபவரின் **அ.சா. 8-வது** நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சதீஷ்குமார், Bench Clerk Grade III அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 8 | தொழில் | - | டிராவல்ஸ் |
| பெயர். | - | சீனுவாசன் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | சுப்பிரமணியன் | சமயம் | - | - |
| கிராமம் | - | மணம்பூண்டி | வயது | - | 52 |

12.08.2026

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மணம்பூண்டி கிராமத்தில் வசித்து டிராவல்ஸ் நடத்தி வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன தேன்மொழி எனது மாமியார். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு காலை 11.00 மணியளவில் எனது மாமியாரும், மாமனாரும் இருசக்கர வாகனத்தில் அகரத்திலிருந்து திருக்கோவிலூர் மார்கமாக TVS 50 இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது மணம்பூண்டி பம்பாய் ஒர்க்ஸாப் அருகே எதிரே வந்த ருக்குமணி பேருந்து அவர்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும் காயம்பட்டவர்களை திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை சேர்த்திருப்பதாக எனக்கு தகவல் கிடைத்தது.

2. நான் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு உடனே சென்றுபார்த்தேன். எனது மாமனாருக்கு லேசான சிராய்ப்பு காயம் ஏற்பட்டிருந்தது. எனது மாமியாருக்கு தலையில் காயம் ஏற்பட்டு மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு மேல்சிசிக்சைக்கு சேர்த்தேன்.அங்கு சிகிச்சையில் இருந்தவர் அன்று மாலை 6 மணியளவில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். பின்பு மறுநாள் போலீசார்எனது

மாமியாரின் பிரேதத்தை பிரேதவிசாரணைசெய்தபோது உடனிருந்தேன். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> - இல்லை**

**Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.**

Digitally signed by SENTHILKUMAR
Date: 2026.08.12 15:31:54 +0530

**D.M-cum-JM,**

**T.V.Nallur.**